**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு**

**Uni5 பக்த விஜயம் - 51. ஸ்ரீஜோகா பரமானந்த் ஜி**

---

## இவரது வரலாறு உணர்த்தும் கருத்துக்கள்

* உடல் பற்றை, புலன் இச்சைகளை இயற்கையாகவே கடக்க வேண்டும்.

* அதற்காக ஆன்மீக வாழ்க்கையில் சில பயிற்சிகள் [வ்ரதம் போன்றவை] உள்ளன.

* ஆனால் தன் மனதை மிகவும் வருத்திக் கொள்ள வேண்டியதில்லை.அதை உடல் ரீதியான சித்ரவதைக்கு உட்படுத்திக் கட்டுப்படுத்த வேண்டாம்.அது இயற்கையான மாற்றத்தைத் தராது.

* மிகவும் கடினமான உடல் வதையை சனாதன தர்மம் வலியுறுத்தவில்லை.

* விவேகமும் விழிப்புணர்வுமே மனதைக் கட்டுப்படுத்தும் மஹாசக்திகள்.

* கண்மூடித்தனமான பழக்கங்கள் ஆன்மீகம் ஆகாது!

**வரலாறு**

வடதேசத்தில் பரசி என்ற ஊரில் வாழ்ந்தவர் தான் ஜோகா. அவருக்கு மிகவும் சிறிய வயது முதல் ஸ்ரீமத் பகவத் கீதை உபதேசிக்கப்பெற்று சில தவறான வழிகாட்டல்களை மேற்கொண்டு வருகிறார். உடல் பற்றைத் துரக்க மிகவும் கொடிய தண்டனையைத் தனக்கே அவர் வழங்கிக் கொள்வார்.தினமும் 700 ஸ்லோகங்களை உடல் நமஸ்காரம் செய்து பாராயணம் செய்வது வழக்கம்.

காந்திஜி உண்ணாவ்ரதம் இருந்தது மனதை விழிப்புணர்வில் இட்டுச் செல்லவே. இவரோ தன்னைக் காயப்படுத்திக் கொள்ளுதல், தரையில் உருளுதல் போன்ற சித்ரவதைகள் செய்வார்.

தினமும் கீதையை முழுமையாகப் பாராயணம் செய்வார்.அதன் மூலம் தனக்கு உடனே மாற்றம் வரும் என்று நம்பினார்.அதை practicalஆகக் கடைப்பிடித்தாலே மாற்றம் வரும் என்று அவருக்கு வழிகாட்ட நல்ல குரு இல்லை.

**பட்டால் பட்ட பாடு**

அப்போது நல்ல மழைக்காலம்.

ஜோகா எப்போதும் போல் பாராயணத்தில் இருக்கிறார்.
குடிசைக்குள் மழையால் சகதி ஏற்பட அதில் நமஸ்காரம் செய்து பாராயணம் செய்கிறார்.
அப்போது அவ்வூரில் உள்ள துணிக்கடைக்காரர் இவரை மிக மிக வற்புறுத்தி ஒரு அழகிய பட்டுத் துணியை அணிந்து கொள்ள அளித்தான்.
பட்டைக் கட்டிக் கொண்ட பின் அது சகதியில் வீணாகக் கூடாதே என்று கவலை வர, மிகவும் கடினப்பட்டு நமஸ்காரம் செய்து பட்டைக் கறை படாமல் காக்க வேண்டியதானது.இதை உணர்ந்த அவர் அப்பட்டின் மீது தன் மனம் வைத்த மோஹத்தால் தான் இவ்வாறு பாராயணம் ஸ்ரத்தை இழக்க நேரிட்டது என்று உணர்ந்து கொள்கிறார்.

மறுநாள் அதை ஒரு உழவனுக்கு அளிக்க அவனும் ஏற்றுக் கொண்டான்.அப்போது அவர் தன்னை ஒரு மாட்டுடன் பூட்டி வயலில் ஏர் இழுக்கச் சொன்னார்.இவரைப் பற்றி அறிந்த அவனும் அதைச் செய்ய, மாடு மிரண்டு இவருக்கு மிகவும் பலத்த அடி பட, இவர் மயங்க, அப்போது இவரது விழிப்புணர்வில் அவ்வுழவனே பாண்டுரங்காய்க் காட்சி தருகிறான்.

**”ஜோகா! உடல் இச்சையைத் துறக்கும் வழி இதுவல்ல. விழிப்புணர்வால் மட்டுமே மனதை மாற்ற முடியும்.அதையே கீதை சொல்வதை நீ ஏன் இன்னும் புரிந்து கொள்ளவில்லை? அனைத்தும் ப்ரஹ்ம தத்வம் என்று இருக்க, இறைவனும் பட்டும் வேறா? ஜனகரின் வாழ்வை நீ அறியவில்லையா? சற்று யோசி!”** என்று அவனுக்குக் கூற, அவர் மனம் சிந்திக்கத் தொடங்கியது.....

ஹரி ஓம்!